இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய உயர் ஸ்தானிகர் அதி மேதகு கோபால் பாக்லே அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி - சிறப்பு மலர்

## உயர் ஸ்தானிகரின் செய்தி

வணக்கம், ஆயுபோவன், நமஸ்கார் !

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள சகல இந்தியர்களுக்கும், இலங்கையைச் சேர்ந்த எனது சகோதர சகோதரிகளுக்கும் மனப்பூர்வமான நல்வாழ்த்துகள்.

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் இவ்வருடம் முழுமைபெறும் நிலையில், தொழில்நுட்பம் சார்ந்ததும் அறிவினை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் செழுமையைத் தரக்கூடியதுமான பொருளாதாரத்துடனான பரிணாம வளர்ச்சியை கொண்ட அடுத்த 25 ஆண்டுகளைக் குறிக்கும் "அம்ரித் கால்" எனப்படும் காலப்பகுதியை ஆரம்பிக்க இந்தியா தயார் நிலையில் உள்ளது.

தேவைப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் நாம் தொடர்ந்தும் இலங்கை மக்களுடன் இணைந்திருக்கும் நிலையில், அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாஹர் (பிராந்தியத்தில் அனைவருக்கும் வளர்ச்சியும் பாதுகாப்பும்) ஆகிய எமது கொள்கைகள் அனைவருக்கும் செழுமையை உறுதிப்படுத்துவதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், தற்போதைய சூழலில் சவால்களைக் கடந்து வளர்ச்சியை நோக்கிய புதிய பயணத்துக்காக இலங்கை தயார்நிலையில் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்திய - இலங்கை நட்புறவும் புதிய மைல்கல்லை நோக்கிச்செல்கின்றது. இவ்வருடத்தில் 75 ஆண்டுகால இராஜதந்திர உறவினை நாம் நிறைவுசெய்யும் அதேவேளை, அடுத்து வரும் 25 ஆண்டுகளில் மிகவும் நெருக்கமானதொரு பொருளாதார பங்குடைமைக்காக திட்டமிடுகின்றோம்.

"தொடர்புகளை மேம்படுத்தல், செழுமையை உறுதிப்படுத்தல்" என்ற தலைப்பில் நம் இரு தலைவர்களும் வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையானது சகல பரிமாணங்களிலும் தொடர்பினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட நீண்டகாலத்துக்குரிய வழிகாட்டியாகும்.

2023 ஜூலையில் ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது இரு நாடுகளினதும்

மக்களை மேலும் பிணைக்கும் துறைகளான சக்தி, பால்வளம், அதிகரித்த வான் & கடல் மார்க்கமான தொடர்புகள், UPI தொடர்புகள், மற்றும் ஏனைய பல்வேறு துறைகள் சார்ந்து விடுக்கப்பட்ட அறிவிப்புகளும் அந்த விஜயத்தின் மூலமான பெறுபேறுகளும் இந்த இலக்கிற்கு மேலும் உத்வேகமளித்துள்ளன.

நண்பர்களே, எதிர்காலம் தொழில்நுட்பத்தினை மையமாகக் கொண்டதாகவே அமைந்திருக்கும். இலங்கை DigiEcon 2030 என்ற பயணத்தினை ஆரம்பிக்கும் நிலையில் எமது டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பினால் வழிநடத்தப்பட்ட ஆக்கபூர்வமான வளர்ச்சியின் மூலமான இந்திய அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்காக நாம் மிகவும் நெருக்கமாக பணியாற்றிவருகின்றோம்.

இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமை இவ்வாண்டில் கொண்டாடப்படும் நிலையில் இவ்வருடமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இச்சமூகத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக இந்திய அரசாங்கம் 3 பில்லியன் இலங்கை ரூபா விசேட நன்கொடையினை அறிவித்துள்ளது. இதேபொன்ற ஒரு தொகுதி உதவி கிழக்கு மாகாண மக்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

நமது மக்களிடையிலான பொதுவான மரபுகள், பிணைப்புகள் மற்றும் நாகரிக தொடர்புகள் ஆகியவற்றின் அடித்தளங்களை மேலும் கட்டியெழுப்புவதன் மூலம் மக்களின் முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான கூட்டு இலக்குடன் நாம் இந்திய இலங்கை உறவின் அடுத்த கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் “அம்ரித் கால்” காலப்பகுதியில் இந்திய இலங்கை பங்குடைமையானது ஆழமாகவும் பரந்தளவிலும் சம அளவில் வளர்ச்சிபெற தயார் நிலையிலுள்ளதென நான் உறுதியாக நம்புகின்றேன்!

********